**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை**

**கலை கலாசார பீடம்**

**நான்காம் வருட முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு**

**2013/2014 (March 2019)**

**GYS 4133 பிரதேச அபிவிருத்தியும் திட்டமிடலும் (Regional Development and Planning)**

நேரம்: 03 மணித்தியாலங்கள்

எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்

பகுதி I இல் இருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இல் இருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

---

## பகுதி I

1. அ) அபிவிருத்தி என்பதற்கு W.W.Rostow, Dudly Seers என்பவர்களாலும் திட்டமிடல் என்பதற்கு Terry, Theo Haimann என்பவர்களாலும் முன்வைக்கப்பட்ட வரைவிலக்கணங்களைத் தருக. (4 x 2= 08 புள்ளிகள்)

   ஆ) பிரதேச அபிவிருத்தி கற்கையின் நோக்கம், அதன் அவசியம் பற்றி விபரிக்குக. (12 புள்ளிகள்)

2. அ) செயற்றிட்டம் (Project) என்பதால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

   ஆ) பொதுவான செயற்றிட்ட வளையம் (Generic Project Cycle) கொண்டிருக்கும் பிரதான நான்கு கட்டங்களையும் அவற்றில் இடம்பெறும் செயற்பாடுகளையும் வரைபடம் மூலம் விளக்குக. (06 புள்ளிகள்)

   இ) றொண்டிநெல்லி (Rondinelli) என்பவரின் செயற்றிட்ட வளையத்தை வரைந்து காட்டுக. (03 புள்ளிகள்)

   ஈ) "உணவுப் பற்றாக்குறை" எனும் மையப் பிரச்சினையினை அடிப்படையாகக் கொண்டு பிரச்சினை மரம் (Problem tree) ஒன்றினை உருவாக்குவதுடன், அதனை தீர்ப்பதற்கான நோக்கற் பகுப்பாய்வு மரத்தினையும் (Objective Analysis Tree) தயாரிக்குக. (09 புள்ளிகள்)

3. அ) வளர்ச்சியடைந்த நாடுகளுக்கும் வளர்முக நாடுகளுக்கும் இடையே காணப்படும் அபிவிருத்திக்கான வேறுபாடுகள் தலா ஐந்தினை சுருக்கமாக விபரிக்குக.

(05 புள்ளிகள்)

ஆ) வளர்ச்சியடைந்த நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட பிரதேச அபிவிருத்தி தொடர்பான அனுபவங்கள் குறைவிருத்தி நாடுகளுக்கு எந்தளவிற்கு பயனுள்ளதாக அமைந்துள்ளது என்பது பற்றி விளக்குக.

(15 புள்ளிகள்)

## பகுதி II

4. பிரதேசங்களை அபிவிருத்திக்காக தெரிவு செய்யும் போது அவதானிக்க வேண்டி அடிப்படையான தத்துவங்கள் பற்றி உதாரணங்களுடன் விளக்குக

(20 புள்ளிகள்)

5. பிரதேச அபிவிருத்தியில் காணப்படும் வேறுபாடுகளுக்கு பொறுப்பாக அமையும் காரணிக தொடர்பாக எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.

(20 புள்ளிகள்)

6. இலங்கையில் பிரதேச ரீதியாக காணப்பட்ட சமமற்ற அபிவிருத்தி நிலையினை நிவர்த் செய்வதற்கு இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட்ட உபாயங்கள் தொடர்பா பரிசீலிக்குக.

(20 புள்ளிகள்)

7. பின்வருவனவற்றுள் யாதாயினும் **இரண்டினிற்கு** விளக்கக் குறிப்புரை எழுதுக.

அ) அபிவிருத்தி செயற்பாட்டின் போது கருத்தில் கொள்ளப்பட வேண்டிய மாறிகள்

ஆ) வளர்ச்சி முனைக் கோட்பாடும் பிரதேச அபிவிருத்தி திட்டமிடலும்

இ) இலங்கையில் ஆற்றுவடிநில அபிவிருத்தி திட்டங்களும் பிரதேச அபிவிருத்தியில் அதன் பங்களிப்பும்

(10x 2 =20புள்ளி